பொருள் எண்.1

இந்நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் வார்டு மறு நிர்ணயம் செய்ய வரப்பெற்ற தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள் : 12.09.2017 மற்றும் உறுப்பினர் செயலர் தமிழ்நாடு மாநில மறு சீரமைப்பு ஆணையம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இ1 நாள்: 19.10.2017.

1182/2017/எச்1

**தீர்மானம் எண்.1762 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன் கீழ், ரூ.21.20 இலட்சம் மதிப்பீட்டில், கீழ்காணும் 3 பணிகளை மேற்கொள்வதற்கு, மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3022/2017 நாள் : 29.11.2017–ன் மூலம், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி – மின்பிடி துறைமுகம் பகுதியில் மீன் ஏலக்கூடம் அமைத்தல் | 9.00 |
| 2. | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.3, அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி வகுப்பறை கட்டுதல் | 9.00 |
| 3. | குளச்சல் நகராட்சி – வார்டு எண்.19, நெசவாளர் வடக்கு தெரு புனித செபஸ்தியார் ஆலயம் அருகில் சோலார் விளக்கு அமைத்தல் | 3.20 |
| | **மொத்தம்** | **21.20** |

மேற்காணும் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1613/2017/இ1

**தீர்மானம் எண்.1763 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிகவளாக முதல் தளம் கடை எண்கள்.38,39,40,57,58,59 ஆகிய கடைகளுக்கு 12.12.2017–ல் பொது ஏலம் நடைபெற்றதில் முதல் தளம் கடை எண்.39,58,59–க்கு கேட்டுள்ள ஏலம் விபரம் பின் வருமாறு,

முதல் தளம் கடை எண்.39

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி ரூ (ஒரு மாதத்திற்கு) | நகராட்சி பொறியாளர் ஏல நிர்ணயம் அரசாங்க மதிப்புத்தொகை | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலம் எடுத்தவர் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | N.சதிஷ் குமார் | 1818/– | 1718/– | N.சதிஷ் குமார் 1818/– |
| 2. | P.ரவி ராஜ் | 1700/– | – | – |

முதல் தளம் கடை எண்.58

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி ரூ (ஒரு மாதத்திற்கு) | நகராட்சி பொறியாளர் ஏல நிர்ணயம் அரசாங்க மதிப்புத்தொகை | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலம் எடுத்தவர் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | வர்க்கீஸ் | 1750/– | 1718/– | – |
| 2. | எம்.கிஷோர் குமார் | 1820/– | – | எம்.கிஷோர் குமார் 1820/– |

முதல் தளம் கடை எண்.59

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி ரூ (ஒரு மாதத்திற்கு) | நகராட்சி பொறியாளர் ஏல நிர்ணயம் அரசாங்க மதிப்புத்தொகை | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலம் எடுத்தவர் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | எம்.கிஷோர் குமார் | 1820/– | 1718/– | எம்.கிஷோர் குமார் 1820/– |
| 2. | வர்க்கீஸ் | 1750/– | – | – |

மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. கடை எண்.38,40,57 ஆகிய கடைகளுக்கு முன் வைப்புத் தொகை எவரும் செலுத்தவில்லை. கலம் (5)–ல் கொடுக்கப்பட்டுள்ள அதிக பட்ச ஏலத்தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. அரசாங்க மதிப்பை விட வாடகை தொகை கூடுதலாக உள்ளது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1764 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

இந்நகராட்சியில் 2016–17–ம் ஆண்டுக்கான வருட கணக்கு முடித்த திரு.நா.கருணாகரன் நாயர் கன்சல்டன் அவர்களால் ஆண்டு கணக்கு முடித்து தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு தணிக்கையும் நடைபெற வகையில் உள்ளது. எனவே 2016–17–ம் ஆண்டு கணக்கு முடித்த வகையில் ரூ.30,000/–ஐ திரு.கருணாகரன் நாயர் அவர்களுக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பி1/2585/2009

**தீர்மானம் எண்.1765 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெஙகு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி 15 DBC பணியாளர்களை 89 நாட்களுக்கு பணி அமர்த்த இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1715 நாள் : 06.08.2017–ல் ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டது. மேலும் ஜனவரி 2018 முதல் மார்ச் 2018 வரை கூடுதலாக 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.6,2500/–க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1834/2017/அ1

**தீர்மானம் எண்.1766 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு, சிஙகாரவேலர் காலனி மற்றும் பர்னட்டிவிளை பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு ஏணிப்படிகள் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்: 1749 நாள்: 30.10.2017–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 22.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.சுகுமாரன் ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| 2 | திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 0.013% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.சுகுமாரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1780/2017/இ1

**தீர்மானம் எண்.1767 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி குடிநீர் வினியோக நீர் உந்து நிலையங்களில் மின்சாரப் பணிகள்(Electrical Works) மற்றும் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/–க்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.1754, நாள்:30.10.2017–ன் மூலம் ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ளும் பொருட்டு 22.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.S.வரதராஜன் ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டை விட 2. 51 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1796/2017/இ2

**தீர்மானம் எண்.1768 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி வெள்ளிப்பிள்ளையார் கோவில் பகுதியில் குடிநீர் வினியோகத்திற்காக நிறுவப்பட்டுள்ள 200KVA ஜெனரேட்டரின் அருகில் உள்ள திறந்த வெளி கிணற்றின் உட்பகுதியில் அமைந்துள்ள ஆழ்துறை கிணற்றிலிருந்து வி.கே.பி பள்ளிக்கூடத்தின் அருகில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீரேற்றி வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் திறந்த வெளி கிணற்றின் Soft மிகவும் ஆழமாக உள்ளதால், ஆழ்துளை கிணற்றின் மின் மோட்டாரில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணியாளர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி இடத்தில் Caly x Bore அமைத்து மின் மோட்டார் பொருத்தும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,10,000/–க்கும், மேற்படி பணியினை குடிநீர் வழஙகல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1931/2017/இ2

**தீர்மானம் எண்.1769 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலுருந்து பெறப்படும் குடிநீர், 10 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு, வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் மின் வினியோகம் இல்லாத நேரஙகளிலும் மின் மோட்டார் அறைகளில் பராமரிப்பு பணிகள் நடைபெறும் நேரஙகளிலும் தடை இல்லாமல் சீராக குடிநீர் வழஙகும் பொருட்டு, குடிநீரேற்றும் நிலையஙகளில் 4 எண்ணம் ஜெனரேட்டர்கள் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி ஜெனரேட்டர்களில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரிகள் பொருத்தப்பட்டு பல வருடஙகள் ஆகிவிட்ட நிலையில், தற்போது பேட்டரிகள் செயலிழந்து, ஜெனரேட்டர்கள் இயக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கீழ்காணும்

விவரப்படி அனைத்து ஜெனரேட்டர்களிலும் பேட்டரிகள் பொருத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.49,500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பேட்டரிகள் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | வி.கே.பி சந்திப்பு<br>62.5KVA | 100 AMS Battery – 1 No |
| 2. | சீம்பிளிவிளை<br>50 KVA | 100 AMS Battery – 1 No |
| 3. | கே.எஸ்.எஸ்.எஸ் காலனி<br>30 KVA | 90 AMS Battery – 1 No |
| 4. | வெள்ளிப்பிள்ளையார் கோவில், பாலத்தன்கரை, 200 KVA | 150 AMS Battery – 1 No |

ந.க.எண்.2008/2017/இ1

**தீர்மானம் எண்.1770 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.10

குளச்சல் நகராட்சி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் கடமையாகும். உள்ளூர் மக்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களின் தேவைகள் போன்றவற்றை சிறந்த நிதி நிர்வாகத்தின் மூலமே செம்மையாக செயல்படுதிட முடியும். நகராட்சியின் வரவினங்களை பொறுத்து செலவினங்கள் அமையும். மேலும், வரவினங்களையும், வரவுகளையும் பெருக்குவதன்மூலம் உள்ளூர் மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தலாம். வரவினங்களில் சொத்துவரி, குடிநீர் கட்டணம். தொழில்வரி மற்றும் குத்தகை இனங்கள் போன்றவை அடங்கும்.

பொது மக்கள் வரியினங்கள் செலுத்துவதற்கு சுமை ஏற்படாமல், நகராட்சியின் வருவாயினை பெருக்குவது சிறந்த நிதி நிர்வாகம் ஆகும். இந்நிலையில் சொத்துவரியினை உயர்த்தி கூடுதல் வருவாயை பெருக்க முற்பட்டால் வரிச்சுமை தாளாமல் பொது மக்கள் மத்தியில் நகராட்சி நிர்வாகத்தின் மீது அதிருப்தி ஏற்படும். எனவே, குத்தகை இனங்களில் குத்தகை உரிமத்தின் மூலமாக நிதிஆதாரத்தினை பெருக்குவது சரியானதாகும். ஏனெனில் குத்தகை உரிமம் என்பது தேவை மற்றும் வெளிப்படை தன்மையின் காரணமாக எவருக்கும் பாதிப்பில்லாமல் வருவாயினை பெருக்கும் ஒரு சிறந்த வழியாகும். எனவே நகராட்சி நிர்வாகத்தினை செம்மையாக நடத்துவதற்கும் சிறப்பாக நிர்வாகத்தினை கொண்டு செல்வதற்கும் குத்தகை உரிமங்களின் மூலம் சரியான, நியாயமான வருவாயினை ஈட்டும் பொருட்டு, தற்போது நகராட்சி நிர்வாகம் பொது ஏலம் முறையினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக குத்தகை உரிம இனங்களை சந்தை மதிப்பிற்கு இணையாக உரிமம் பெறும் பொருட்டு(வாடகை) அரசு ஆணைகளுக்கு இனங்க பொது ஏலம் விடுவது நகராட்சிக்கு லாபகரமாக அமையும். இந்நிலையில் குளச்சல்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி கடைகள், பெரும்பாலனவை சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தனிநபர்களே குறைந்த உரிமத்தொகையில் அனுபவித்து வருகின்றனர். 2000ஆம் ஆண்டு அரசாணைஎண்.147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை நாள். 30.12.2000–ல் அறிவுறுத்தப்பட்டவாறு அங்காடி மதிப்பு ஏதும் அப்போது நிர்ணயம் செய்யப்படாமல் முன்பிருந்த வாடகையில் 15% மட்டுமே உயர்த்தி மீண்டும் மூன்றாண்டுகளுக்கு மீண்டும் உரிமம் புதுப்பித்து வழஙகப்பட்டது.

மேலும் 2007ம் ஆண்டு அரசாணை 92 வெளியிடப்பட்டது. அதற்கு பின்பு கடைகளுக்கு வாடகை அன்றைய சந்தை மதிப்பில் வாடகை மறுமதிப்பீடு செய்யப்படவில்லை. தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மட்டும் 15%உயர்வு செய்து இன்றுவரை குத்தகைதாரர்களால் வாடகை (மாதஉரிமத்தொகை) செலுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட அரசாணை தொடர்ந்து மூன்றாண்டு தொகுப்பு கால அளவாகக் கொண்டு மூன்றுமுறை மட்டுமே புதுப்பிக்கப்படவேண்டும். குத்தகை உரிமம் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு தற்பொழுது சந்தை மதிப்பில் வாடகை மதிப்பீடு செய்வது அல்லது பொது ஏலம் நடத்தி நியாயமான முறையில் அரசிற்கு சொந்தமான நகராட்சி கடைகளுக்கு உண்மையான மதிப்பினை பெறவேண்டியுள்ளது.

குத்தகை உரிமம் என்பது காலவரையறைக்குட்பட்டது. எனவே குத்தகையை தொடர்ந்து அனுபவிப்பது தவறாகும். மேலும் தொடர்ந்து ஒருவரே கடைகளை நடத்துவது குத்தகை விதிகளுக்கு முரண்பட்ட செயலாகும். குத்தகைதாரர் ஒன்பது ஆண்டுகள் குத்தகை உரிமம் முடிவுற்ற பின்பு கடையினை காலி செய்து விடவேண்டும், தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என குத்தகை உரிமதாரர்கள் கூறுவது சட்டத்திற்கு புறம்பானதாகும். தொடர்ந்து தனிநபரே கடையினை அனுபவித்து வருவதன்மூலம் மற்றவர்களது சமவாய்ப்பினை தட்டிப்பறிப்பதாகும். இது குடிமக்களின் அடிப்படை உரிமையினை பாதிக்கும் செயலாகும். பொதுசொத்து என்பது அனைவருக்கும் பொதுவானது. அனைவரும் பங்கேற்கும் வகையில் நியாயமான வெளிப்படையான முறையில் ஏலம் நடத்தப்படவேண்டும். இதன்மூலம் சமூகப்பொருளாதார நீதி நிலை நாட்டப்படும். அரசின் வருவாயினை பெருக்க போட்டி நிறைந்த சூழ்நிலையில் பொது ஏலம் நடத்துவது சரியானதாகும் .

தற்போது குளச்சல் நகராட்சியில் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் அலுவலகப்பணிகள் மற்றும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளுவதில் தொய்வு ஏற்படுகிறது. மேலும் பணியாளர்கள் ஊதியம் மற்றும் ஓய்வூதியம், செலவினங்கள் 49 சதவீதத்திற்கு மேல் உள்ளதால், நகராட்சியில் நிதி பற்றாக்குறையின் காரணமாக நகராட்சி பணியாளர்களுக்கு மாத ஊதியம், அம்மா உணவக செலவினங்கள் மற்றும் மின்சாரக்கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. நகராட்சி வருவாயினை பெருக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி காலிப்பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அரசாணை எண்.1/2013ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி பல்வேறு திட்டங்களுக்கு செலுத்தப்படவேண்டிய பங்குத்தொகை மற்றும் நகராட்சி கடன் விபரங்கள் பின்வருமாறு உள்ளது.

<u>நகராட்சி பங்கு தொகை குறித்த விபரம்</u>

| வ. எண் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | நகராட்சி பங்கு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Namma toilet (Universal Design Toilet) | - | 20.00 |
| 2 | SBM – Community Toilet | 11.00 | 7.10 |
| 3 | மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி | 250.00 | 22.00 |
| 4 | சிறப்பு சாலைத் திட்டம் | 50.00 | 17.00 |
| 5 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 178.00 | 44.50 |
| | | **489.00** | **110.60** |

**<u>நகராட்சி வழஙக வேண்டியுள்ள நிலுவைகள் குறித்த விபரம்</u>**

| வ.எண் | நிலுவை விவரம் | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை | 75.73 |
| 2 | நகராட்சி மொத்த வருவாயில் பணியாளர்களுக்கு வழஙகப்படும் ஊதியம், ஒய்வூதியம் உட்பட ஏற்படும் நிர்வாக செலவுகள் | 243.07 |
| | **மொத்தம்** | **318.80** |

மேலும், ஆணையர் அவர்களின் ஆய்வின் போது பல்வேறு கடைகள் உள்குத்தகைக்கு விடப்பட்டும், சில இடஙகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் இணைத்து ஒரே கடையாக நடத்தி வருவதாலும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவது கண்டறியப்பட்டது.

இந்நிலையில் புதிதாக ஏலம் நடத்தும் பட்சத்தில் சந்தை மதிப்பீடு நிர்ணயித்ததைவிட பல மடஙகு வருவாய் கூடுதலாக கிடைக்கும். எனவே நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு ஏலம் முடிவடைந்து 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மறு ஏலம் விட மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**கடைகள் விவரம்**

| வ. எண் | குத்தகை எல உரிமை விபரம் | குத்தகை உரிமை கால அளவு | ஏலம் விடப்படும் கடை எண்கள் | ஏல டேவணித் தொகை (வஙகி வரைவோலையாக) |
|---|---|---|---|---|
| 01 | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் . | 3 ஆண்டுகள் | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15,16 | 2,00,000/– |
| 02 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம். | „ | 15, 17, 18, 19, 20, 31,32,38,39,40,41,42,43,54,55, 56,57,58,59 | 2,00,000/– |
| 03 | காமராஜர் பேருந்து நிலைய கடைகள். | „ | 34,35,36,37,38 | 2,00,000/– |

மேலும் பொது ஏலம் நடத்துவதால் தற்போதைய உரிமதாரர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களது வாழ்வதாரம் பாதிக்கப்படும் என்பது சரியல்ல. ஏனெனில் தற்போதைய உரிமதாரரும் ஏலத்தில் பஙகுபெறலாம், பொதுமக்களும் பஙகுபெறலாம். திடீரென ஏலம் கொண்டுவருவதன் மூலம் கடைகாரர்கள் நகராட்சியின்மீது அதிருப்தி ஏற்படும் என்பதும் சரியல்ல. குத்தகை உரிமம் என்பது காலவரையரைக்கு உட்பட்து என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். உரிம காலம் முடிவுற்றபின்பு தன்னியல்பாக கடையின் உரிமம் ரத்தாகிவிடும். தாஙகளகவே கடையினை காலிசெய்துவிட வேண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். வருவாயினை உயர்த்தும் இந்நடவடிக்கைக்கு பொது மக்கள் மத்தியில் நகராட்சி நிர்வாகத்தின் மீது நன்மதிப்பினை ஏற்படுவதுடன், அனைவருக்கும் சமவாய்ப்பு

கிடைக்கப்பெறும். எனவே குத்தகை உரிமத்தை புதுப்பிக்ககோரி வரப்பெற்ற மனுக்களை நிராகரிக்கலாம்.

எனவே, நகராட்சி சொத்தை தனிநபர்களே தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருவதை தடுத்து, பொது சொத்தை அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொது ஏலம் நடத்தி, அனைவரும் பயன்படும் வகையில் சமவாய்ப்பு வழஙகவும், சமூகப்பொருளாதார நீதி நிலை நாட்டப்படுவதுடன், நகராட்சியின் வருவாயினை பெருக்கி, பொதுமக்களின் அடிப்படை வசதி, அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நகராட்சி கடைகளை மறுஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

அலுவலக குறிப்பு :–

1) தற்சமயம் பொது ஏலம் விடும் பட்சத்தில், நகராட்சி நிதி பற்றாக்குறையை போக்கும் வகையில் அதிக வருவாய் பெற வாய்ப்பு உள்ளது. மேலும் பொதுமக்கள் அனைவரும் பஙகேற்க சமவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

2) ஒருவரே தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கு மேலாக கடையை நடத்திக்கொண்டு வருவதால் மற்றவர்களின் நியாயமான வாய்ப்பு பறிக்கப்படுவது தடுக்கப்படுவதுடன், தொடர்ந்து குத்தகை உரிமத்தை புதுப்பிக்கும் முறையில் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகிறது.

3) மேற்படி பொது ஏலம் நடத்தப்படும் பட்சத்தில் நிதி நிலை சீராவதுடன், இதனால் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் மேம்படுத்தப்படும்.

4) பொது ஏலத்தினை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலம் நடத்திடலாம்.

5) எனவே நகராட்சி நிர்வாக நலன் மற்றும் பொது மக்களின் நலன்கருதி ஏலம் விடப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு மேலான நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கடைகளையும் பொது ஏலம் நடத்திடவும் அதற்கு ஆகும் செலவினஙகளுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1771 அஙகீகரிக்கப்பட்டது.**

ஆணையாளர்
குளச்சல் நகராட்சி